Sl. No. of Q.P. : 7511

E-T

| | | |
|---|---|---|
| Name of the Paper | : | Skills of Language Use and a Modern Prose Text |
| Name of the Course | : | B.A. (Prog.), I Year- Paper-I: Tamil (B) |
| Semester/ Annual | : | Annual Mode |
| Duration | : | 3 Hours |
| Maximum Marks | : | 100 |

1. ஏதேனும் ஒரு தலைப்பில் சிறு கட்டுரை (150 சொற்கள் ) *ஒன்று* வரைக: 20

அ. பாலியல் வன்கொடுமை

ஆ. முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை

இ. தில்லியில் ஆம் ஆத்மிக் கட்சியின் ஆட்சி

2. கீழ்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினவப்பட்டிருக்கும் வினாக்களுக்கு உரிய விடை தருக: 20

திருநாட்டைப் பெண்களே தலைமுறை தலைமுறையாக ஆண்டு வந்துள்ளனர். அதனால் திருநாடு பெண்ணரசு நாடு எனவும் வழங்கப்பட்டுள்ளது. திருநாட்டை ஆண்டு வந்த மகாராணிகளைப் பெண்ணரசுக் காவியம் குறிப்பிடுகிறது. அவர்கள் பெண்ணரசி-1, திருவணையாள், இளவரசாள் அம்மன், பெண்ணரசி-2, புருஷா தேவி ஆகியோர் ஆவர். இவர்கள் ஆண்டு வந்த திருநாடு காஞ்சிபுரத்தை அடுத்து இருந்ததாகப் பெண்ணரசுக் காவியம் குறிப்பிடுகிறது. இந் நாட்டின் மீது படையெடுப்பதற்கு எதிரி மன்னன் காஞ்சிபுரத்திற்குட்பட்ட மையூரில் பாளையம் அடித்திருந்ததாக அக் காவியம் குறிப்பிடுகிறது. மையூர் என்னுமிடம் செங்கல்பட்டிலிருந்து மாமண்டூர் செல்லும் வழியில் 5 கி.மீ தொலைவிலிருந்து மேற்காக 2 கி.மீ. தொலைவில் பாலாற்றின் கரையில் அமைந்துள்ளது. தற்போது இவ்வூர் காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்டது. எனவே பழங்காலச் செங்கல்பட்டு என்னும் பெரும் பகுதிக்கு உட்பட்ட, தற்காலக் காஞ்சிபுர மாவட்டத்திற்கு உட்பட்ட ஒரு பகுதியாகவே திருநாடு இருக்க வேண்டும். திருநாட்டில் பாய்ந்தோடிய ஆறு கல்லாறு ஆகும்.

கேள்விகள் :

அ. திருநாட்டின் மற்றொரு பெயர் என்ன?

ஆ. திருநாட்டை ஆண்ட மகாராணிகள் யாவர்?

இ. எதிரி மன்னன் பாளையம் அடித்திருந்த இடம் எது? அது எங்குள்ளது?

ஈ. கல்லாறு எங்குப் பாய்ந்தோடியது?

உ. இப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பைத் தந்து, இதன் மையக் கருத்தைச் சுருங்கக் கூறுக.

3. பிழை திருத்துக 10

அ. மணற்கேனி

ஆ. கலிங்கத்துப் பறணி

இ. எட்டுத்தெகை

ஈ. வெகுலாமை

உ. வாண்சிறப்பு

4. ஒரு பொருள் குறித்த பல சொற்கள் மொழியில் பெறும் இடத்தினைச் சான்றுகளுடன் விளக்குக. 10

(அல்லது)

பல பொருள் ஒரு சொல் என்றால் என்ன? சான்றுகள் தந்து விளக்குக.

5. *வீடு* சிறுகதையில் கையாளப்பட்டிருக்கும் சிறுகதை உத்தியை எடுத்துரைக்க. 20

(அல்லது)

*வேட்கை* சிறுகதையின் தலைப்புப் பொருத்தத்தை ஆராய்க.

6. *பள்ளத்தெரு* (அல்லது) *மாயக்கிளிகள்* சிறுகதையை மதிப்பிடுக. 20